பௌர்ணமிக் கனாக்கள்

புதுக்கவிதைகள்



ஆனாழானா. அண்ணாமலை பி. ஏ., ஒ. சிறுவயல்

பௌர்ணமிக் கனாக்கள்

புதுக் கவிதைகள்

சிறுவயல் ஆனழானா. அண்ணாமலை B. A.

விற்பனை உரிமை :
பொன்முடி பதிப்பகம்
123, முத்துப்பட்டணம் மூன்றாம் தெரு,
காரைக்குடி - 623 001
ப. மு. மாவட்டம். போன் : 2124

முதற் பதிப்பு : சனவரி 1991

விலை ரூ. 6 - 00

Publishers:
Ponmudi Pathiphagam, 123, Muthupattanam III Street,
Karaikudi-623 001. P. T. T. Dist. Phone: 2124

"தெய்வத் தமிழுக்குத் திருப்பணிகள் செய்விக்க
உய்வித்த இறைவா! உன்தாள் போற்றி!"
— சிறுவயல் ஆனு ழானு. அண்ணுமலே

என்னுரை

எனக்குக் கவிதை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் உண்டு. என் ஆர்வத்திற்கு வித்திட்டவர் கவியரசர் கண்ணதாசன். அவருடைய கவிதைகளே படிக்குந் தோறும், பாடல்களேக் கேட்குந்தோறும் எனக்குள்ளே ஒரு உத்வேகம் ஏற்பட்டது. அதன் பிரவாகமாய் தோன்றியதுதான் இந்தப் "பௌர்ணமிக் கனுக்கள்" என்னும் புதுக்கவிதைத் தொகுப்பு. மரபுக் கவிதைக்கு இமாலயக் கவிஞர் கண்ணதாசன். நானும் மரபுக் கவிதைகள் எழுதி இருப்பினும் என்னுடைய முதல் வெளியீடாக இந்த புதுக்கவிதைத் தொகுப்பினே வெளியிடுகிறேன்.

எனக்கு இந்தச் சமுதாயத்தின்மீது அடிக்கடி கோபதாப உணர்ச்சிகளே வரும். அப்படி எனக்கு வருகின்றபோதுதான் 'இப்படி இவர்கள் நடந்திருப் பார்களேயானுல் அவர்களுக்கும் கெட்ட பெயர் வராது. எனக்கும் பிரச்சினேகள் வராதே!' என்று மேலோங்கிய எண்ணம் எழுந்தபோதுதான் இந்தக் கவிதைக் கருக்களே எனக்குள் வளர்ந்து ஜெனித்தன.

அவை என் மனக் கொந்தளிப்புக்கும், மனக் குளிர்ச்சிக்கும் தோன்றியன என்பதால் சில காரசார மாக இருக்கும், சில கவிதைகள் குளிர்ச்சியாய் இருக்கும். எனவே, இந்த முதல் வெளியீடான எனது தலைப் பிரசவத்திற்கு தொடர்ந்து ஆக்கமும், ஊக்கமும் தந்து இன்னும் நிறைய படைக்கச்செய்ய வேணுமாய் வாசகர்களாகிய உங்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இத் தொகுப்பிற்கு அணிந்துரை வழங்கிய காசிஸ்ரீ அரு சோமசுந்தரன் அவர்களுக்கும் இதனை சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த அரசு அச்சக உரிமையாளர் திரு. சித. சிதம்பரம் அவர்களுக்கும், உ. சிறுவயல் மதுரை வங்கி மேனேஜர் திரு இராம. லெட்சுமணன் அவர்களுக்கும் மென்மேலும் என் கவிதை வளர்ச்சிக்கு மிகுந்த ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தந்த என் தந்தை சி. சித. அழகப்பச் செட்டியார் (மலர்வாணன்) அவர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

ஆனா. அண்ணாமலை

அணிந்துரை

தம்பி அண்ணாமலை எழுதி உள்ள ''பௌர்ணமிக் கனுக்கள்'' என்ற புதுக்கவிதை நூல் முழுவதையும் படித்து மகிழ்ந்தேன். பொதுவாகவே புதுக் கவிதைகளை நான் வரவேற்பதில்லை. ஆனால் தம்பி அண்ணாமலையின் கவிதைகளை நான் முழுவதும் படித்ததற்குக் காரணம் ஒரு தலைமுறை இடை வெளியை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையே.

இளைஞனாக இருப்பதால் அண்ணாமலையின் கவிதைகள் பருவராகங்கள் பல விதத்தில் உருவகம் பெற்றுப் படர்ந்துள்ளன. மொழி முதல் நாடு வரை எல்லாப் பொருள்களும் இந்த இளங் கவிஞனின் எண்ண வீச்சுக்குள் இடம் பிடித்துள்ளன. சிலேடை நயங்கள் அங்கங்கே பளிச்சிடுகின்றன, தமிழ் எழுத்தின் வரி வடிவங்களும் சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன, கவிஞர்களின் வறுமையும் கூடக் காகிதத்தைத் தின்னும் அளவுக்கு உரம்பெற்றுள்ளன.

இந்தக் கவிதைத் தொகுப்பில் இடம் பெறாத பிரச்சனையே இல்லை எனலாம். எல்லாத் துறையிலும் தன் பார்வையினைச் செலுத்தி, அழகிய பாமாலை யினைப் புதுமாலையாகத் தமிழ்த் தாய்க்குப் படைக்கும் இளங்கவிஞன் அண்ணாமலைக்கு என் பாராட்டுக்களும் நல்வாழ்த்துக்களும் உரியன.

அரு. சோமசுந்தரன்

வாழ்த்துரை

தம்பி சிறுவயல் ஆறுமுகம். அண்ணாமலையின் 'பௌர்ணமிக் கனுக்கள்' புதுக் கவிதைத் தொகுப்பினைப் படித்தேன். ஒவ்வொரு கவிதையிலும் தற்காலச் சூழல்கள் நன்கு படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. ஒரு முறை படித்தாலே அதன் கருத்துக்கள் மனதில் பதியக்கூடிய அளவிற்கு எளிய நடையிலும், அதே நேரத்தில் அன்றாட நிகழ்ச்சிகளையும் ஒரு சேரக்கூட்டி பிரதிபலிக்கும் வண்ணம் புதுக் கவிதைகள் அனைத்தும் தீட்டப்பட்டுள்ளமையால் அவை உயிரோட்டமாய் விளங்குகின்றன.

'பட்டினிக் கொடுமை' என்ற தலைப்பிலே,

பசிக் கொடுமை
பற்றி எழுதக்
காகிதம் எடுத்தான்
கவிஞன்.
என்னே கொடுமை!
எடுத்த காகிதத்தை
அவனே தின்றான்.

என்று உள்ள கவிதையில் கவிஞனின் வறுமை நிலை எத்தகையது என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.

மற்றோர் கவிதையில் 'வேலையில்லாப் பட்டதாரிகள்' பற்றி

நாங்கள் —
தரையில் அலையும்
மேகங்கள்
எங்களுக்கு
நாளெல்லாம் ஞாயிறே

என்று எழுதியதனை நாம் நடைமுறையில் காண்கிறோம்.

'அபலைப் பெண்ணொருத்தி' வரதட்சணைக் கொடுமையால் வாடி வதங்குவது பற்றிச் சொல்லும்போது

நோட்டுக்கள்
ரெக்கையானால்தான்
கூட்டுக்குள் போகலாமென
குயில் எண்ணிக்
கலங்கிய படியே
திராவக நீரை வடிக்கின்றாள்

என்று எழுதியிருப்பது மிகவும் ரசிக்கத்தக்கது.

கவியரசர் கண்ணதாசனைப் பற்றிச் சொல்லும்போது

கண்ணதாசா !
சேவல்கூவி
ஜெகமே விழித்ததுபோல்
செப்பும் கவிதைகளால்
ஜெகத்தை
விழிக்க வைத்தாய்
....
தானாகப் போவோனுக்கும்
உன் பாடல்கள்
தேனாகப் பாய்ந்து
தித்தித்ததன் மர்மமென்ன ?

என்று எழுதியுள்ளதை நோக்கும்போது கவியரசர் கண்ணதாசன் கவிதைகள் எப்பேற்பட்டன என்று விளங்கு வதோடு மட்டும் அல்லாமல் தம்பி சிறுவயல் ஆனாழானா அண்ணாமலையின் கவிதைகளும் எப்பேற்பட்டன என்பதும் நமக்குப் புலனாகிறது.

மென்மேலும் தமிழ் வளர்ச்சிக்கு இந்தத் தம்பி அரும் பாடுபட்டு தன்னையும் தமிழையும் இந்தத் தரணி புகழ்ந்திடுமாறு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

சித. சிதம்பரம்
நகர்மன்றத் தலைவர்,
காரைக்குடி.

காணிக்கை

"யாரை நம்பி நான் பிறந்தேன்
போங்கடா போங்க! — என்
காலம் வெல்லும் வென்றபின்னே
வாங்கடா வாங்க!"

— கவியரசர் கண்ணதாசன்

உணர்ச்சிமிகு தத்துவம், காதல், பக்திப் பாடல்களை எழுதிக் குவித்து தமிழ் மகளின் மேனியெங்கும் சொக்கத் தங்கத்தால் ஆபரணம் கட்டியவர் கவியரசர் கண்ணதாசன்,

அந்தக் கவி இமயமலையின் அடிவாரத்தில் பூத்தெழுந்த காலான்தான் நான் என்பதைத் தெரியப்படுத்தி என்னுடைய இந்த முதற் படைப்பான 'பௌர்ணமிக் கனுக்கள்' புதுக் கவிதைத் தொகுப்பினை கவியரசர் கண்ணதாசன் அவர்களுக்கு காணிக்கை ஆக்குகிறேன்.

அன்புடன்,

சிறுவயல் ஆனாழானா. அண்ணாமலை

பௌர்ணமிக் கனுக்கள்

புதுக்கவிதைகள்

அன்பின் மகிமை

மழைத்துளிபோல்
அவளின் அன்பு
பரிணமளிப்பதால்
நானும்
நித்தம் நித்தம்
காளானுய்ப்
பூத்துக் கொண்டிருக்கிறேன்

நினைப்பால் வரும் வருணிப்பு

அவள்
'வானவில்' அல்ல
அவள் மேனி
'மஞ்சள்' நிறம்
அதிலே தெரிகின்ற
இளம் நரம்புகள்
பச்சை நிறம்
அதில் அமர்ந்திருக்கும்
எண்ணற்ற மச்சங்கள்
'கறுப்பு' நிறம்
இசை பாடும்
இனிய 'நா'வும்
'சிவப்பு' நிறம்
மலைத்தேனை
சிந்தும் இதழ்கள்
'ரோஸ்' நிறம்
கவிகூறும்
கயல்விழிகள்
'வெண்மை' நிறம்
அந்தக் கருவிழிக்குள்
உள்ளிருக்கும்
சிறு விழியோ
ஊதா நிறம்
இத்தனை இடங்களில்
இவ்வளவு வண்ணங்களைத்
தனக்குள்ளே வைத்திருக்கும்
அவளா
வானவில்?
இல்லை... இல்லை...
எனக்கென்றே
காமன்விட்ட
'பாணவில்'

கொடியும் மரமும்

அவள்
'பைங்கொடி'தான்
படர்வதற்கு
அவள்
பக்கத்திலேயே

நான்
பட்டமரமாய்க்கூட
நிற்கத் தயார்

காலச் சுழற்சி

அவள்
காதலிக்கும்போது
'சுவிட்ச்' போடாமலேயே
எரிந்தாள்
கல்யாணத்திற்குப்பின்
சுவிட்ச போட்டும்
எரியவில்லை
ஓ!
மெயின் 'சுவிட்சாக'
என் அம்மா
இருக்கிறளோ?

(ஏ)மாற்றம்

அன்புடன் பழகிய
அவள் சொன்னாள்
என்னைத் தவிர
மண்ணில் யாரையும்
மணக்க மாட்டேன் என
மாண்புறு
சத்தியம்
செய்து கொடுங்கள்
என்று
நானும்
சத்தியம் செய்தேன்
அவள்
இன்னொருவனுக்கு
மாலையிட்டாள்

நான்
'சந்நியாசி'யாய்
இரயிலைப் போகவிட்ட
'கைகாட்டி.' போல்
நின்றேன்

ர(ா)கங்கள்

அவள் ஒரு
'வீணை'
நான்
மீட்டும்போதுதான்
புதைந்து கிடந்த
அத்தனை ராகங்களும்
புலப்பட்டன

பேரழகு

புத்தர்
இப்போது
பிறக்க வேண்டும்
இல்லையேல்
இவள்
அப்போது
பிறந்திருக்கவேண்டும்
நிச்சயம்
புத்தர் சரித்திரத்தில்
தன்னை இழந்திருப்பார்

காதல் ஞானம்

அவளின்
மென்மையான
இதயத்தை
'தாமரை' என்றேன்

பின்னால்தான் தெரிந்தது
அதிலே
'எத்தனை விரிசல்கள்'
என்று

அங்கும் - இங்கும்

என்
இதயத்தில்
அவள் பௌர்ணமி
அவள்
இதயத்தில்
நான் அமாவாசை

(வே)லை

'இன்டர்வியூ'வில்
எல்லாம் தெரிந்த
'எனக்கு ஏமாற்றம்'
ஒன்றுமே தெரியாத
அவளுக்கோ
'அப்பாயின்மெண்ட்'
அதுவும் எனக்குத்
தெரிந்தது
'உள்ளே—
மேனேஜருக்கு
'ஏதேதோ' தெரிந்தது
என்று.

ஓசையும் மௌனமும்

நான் —
வஞ்சியின் வதனத்தை
வாயார வாழ்த்தியபோது
அவளோ —
மறுமொழியாய்
மௌனமாய்
செருப்பினால்
செப்பினாள்

பெண்ணின் மகிமை

பாவையைப் பார்த்ததும்
பாடல் பிறந்தது
அவளைப்
பாராத வேளையில்
'பா'டல்லானது

காதலின் பரிணாமம்

முதலில் 'காத்தல்'
பிறகுதான் 'காதல்'
அது வென்றால் 'கத்தல்'
தோற்றால் 'கதறல்'

பிறப் பீடமும்
வளர்ப் பீடமும்

காதல் —
இதற்குக்
கண்கள் பிறப்பீடம்
இதயம்தான் வளர்ப்பீடம்

காதல் லீலைகள்

அவனோ
உடும்புப் பிடியாகத்தான்
அவளைப் பிடித்தான்.
அவளோ
மீனாக நழுவிவிட்டாள்.

'பூ'வை

அவளை —
அன்று 'ரோஜாப் பூ'
என்றேன்
இன்றும்
அவள் பூதான்
ஆனால் அரளிப் பூ.

சமநிலை

ஆசை —
குளிர்ச்சி அடையச்
செய்யும்போது
அச்சம் —
கொதிப்படைய
வைத்துவிடுகிறதே!
இதுதான் சமநிலையோ!

(அ)கோரப் பசி

காமப்பசி —
அறிவை ஜீரணித்து
ஆட்சி நடத்துகிறது'

சரிநிகர் சமானம்

அவளைச்
சிரிக்க வைத்தேன்.
அதற்குக் கைமாருய்
அவள் என்னை
அழவைத்தாள்.

நினைவுகள்

அவளின் நினைவே
பசுமையாய் இருப்பதால்
நள்ளிரவுகூட
நண்பகலாய்த் தெரிகிறது.

கண்'கள்'

கண்களும் கண்களும்
கலந்து கொண்டால்
அங்கே இதழ்களுக்கு
வேலையில்லை.
விடுமுறைதான்.

(ஆ)தங்கம்

அவளை
வெளி நாட்டிற்குக்
கூட்டிச் சென்றேன்
என்னை
உள்ளே தள்ளினர்கள்
தங்கக் கடத்தல்
செய்கிறேனும்

காதல் கரைந்தபோது..

அவளுடைய
நலக்கணம்
இலக்கணமானபோது
என்னுடைய
தாட்சண்யம்தான்
அங்கே
இலக்கியமானது

எதுவானுலும் அதுவாவேன்

அவள் 'பூமி'யானுல்
நான்
'பைசா' நகரக்

'கோபுரமா'வேன்.
அவள் 'கடலானால்'
நான் கலமா'வேன்.
அவள் 'வானமானால்'
அப்போது நான்
மேகமா'வேன்

பூவையின் இலக்கணம்

அவள் 'பூ'
பருவம் வனப்பு
உள்ளம் அன்பு
பார்வை இனிப்பு
இதழ்கள் மிளிர்ப்பு
கன்னம் சிவப்பு
செவிகள் சிலிர்ப்பு
கைகள் திளைப்பு
கால்கள் எடுப்பு
மச்சம் கருப்பு
மிச்சம் சிறப்பு
அவளோ கற்பு
எனவே
அவள் 'பூ'

இயற்கையும் இளையவளும்

அவள் அழவில்லை.
கண்களின் வண்ணம்
கார்மேகம் என்றேன்
அதுதான்
மழை பொழிகிருள்
பளிச்செனும்
பார்வையால்
மின்னலடிக்கிருள்.
அதனால்தான்
என்னை 'இடி'க்கிருள்.
மழையுடன் கூடிய
மின்னலும்
மின்னலுடன் கூடிய
இடியுமாய்
இயற்கைக்குள்ளே
இளையவள் இருப்பதால்
பெண்ணில் விண்ணை
மண்ணிலே கண்டேன்.

பயணம்

ஊடலில்
ஒவ்வொரு விநாடியும்
சொர்க்கத்தின் பயணம்தான்

புதுப்புது அர்த்தங்கள்

'காதலுக்குக் கண்ணில்லை'
என்றுதான் சொன்னார்கள்.
ஆனால்
அவளுடைய கண்களிலோ
காதலில்லை.

உணர்ச்சிகள்

இதயம் —
அது எனக்கு
இதமாய் இருக்கிறது.
அவளுக்கோ அது
ஈயமாய் இருக்கிறது.

அவள்
அன்றும் இன்றும்

அன்று
காந்தப் பார்வை
இன்று
கந்தகப் பார்வை.
அன்று
தென்றலாய் வீசினாள்.
இன்று
திராவகம் வீசுகிறாள்.
அன்று
தீபமாய்ப் பிரகாசித்தாள்
இன்று
தீயாய்ப் பொறிகிறாள்
அன்று
தேனொழுகப் பேசினாள்.
இன்று
தேளெனக் கொட்டுகிறாள்
அன்று
நாதத்தின் ஓசையானாள்
இன்று
வானத்தின் ஓசையானாள்
காரணம் ஒன்றுதான்
அன்று
எனக்குத் தெரிந்தது
'முகக் கவர்ச்சி'
இன்று
எனக்கும் அவளுக்கும்
'மனக் கிளர்ச்சி'

அனுசரிப்பு

வள்ளலின் வாசலைப்போல்
வஞ்சியின் வாயும்
திறந்ததினால்
கஞ்சனின் கதவினைப்போல்
காளைஎன் வாயை
மூடிக் கொண்டேன்

காம வேட்கை

'இருவரும் ஒருவரானோம்'
என்றான் அவன்
இல்லை —
'இருவரும் மூவரானோம்'
என்றாள் அவள்

இதழ்கள்

செய்திகள்—
கொண்டது
'நாளிதழ்'
ஆனால்,
தித்திப்பைத் தருவதோ
'தேனிதழ்'

நிலவவள்

நான் அழைத்தும்
நீ வரவில்லை
ஆனால்
நானாகச் செல்லும்போது
நீ ஏன் தானாகவே
என் பின்னால் வருகிறாய்?
நிலவைப் போல
ஓ! அதன் பெயர்தான்
காதலா?

வரம் - ஸ்வரமாய்

கடவுள்
'தொட்டதெல்லாம்
பொன்னாகும்'
என்றே
வரம் தந்தார்
நானோ
சற்றே திருத்தம் செய்து
'தொட்டதெல்லாம்
பெண்ணாகும்'
என்றே வரம்
தாருங்கள் என்றேன்

ஏற்றத்தாழ்வு

பெண்—
சிரித்தால்
'இமயமலை'
உச்சிக்கே
போய்விடுகிறான்
சீறினால்
அதள பாதாளத்தில்
வீழ்கிறான்

கன்னி

ஓர் கன்னி
என்னைப் பார்த்து
'கண் நீ' என்றாள்
கடைசியில்
அந்தக் கன்னி
என்னை இப்படிக்
கன்னிப்போக
வைத்து விட்டாள்

மோடலை முடிவுகள்

உன் நகை
அருமையாக
இருக்கிறதென்றார்
நானும்
வாழ்நாள் முழுதும்
அவருக்காகவே
நகைத்துக்
கொண்டிருந்தேன்.
நான்
கொண்டுவந்த
நகையை யெல்லாம்
அவர் கேட்கும்
போதெல்லாம்
எடுத்துக் கொடுத்தேன்
அந்தத் துக்கத்திலும்
அவரிடம் நான்
மெதுவாய் கேட்டேன்
முன்னமைக்கு
இப்போது
என் நகை
மெருகேறி
இருக்கிறதா? என்று
அவர் சொன்னார்
நான்
நகை என்று சொன்னது
உந்தன்
'புன்னகை'யை அல்ல
'பொன்நகை'யை என்றார்
உள்ளத்தில்
குமுறிக் கொண்டேன்
நான் காலமெல்லாம்
நகைத்தது
வீணாகப் போய்விட்டதே
என்று

பணக்கார மனைவியும் குடிகாரக் கணவனும்

அவன்
அவளின் மூக்கினிலே
குத்தியதால்
வந்ததிந்த 'மூக்குத்தி'
அவள்
வீட்டைவிட்டுக்
கோபித்துப் போனதோடு
வந்ததிந்தத் 'தோடு'
அடித்துத்
துன்புறுத்தியதால்
அவனுக்கு வந்த
கிலியாலே
வந்ததிந்த 'சங்கிலி'
உயிர்காப்பு
வேண்டியதால்
பின்னர்
பெற்றோர்கள்
தந்தார்கள்
'கைக்காப்பு'
மிஞ்சாமல்
அவள் அடங்கி
நடந்திடவே
வாங்கிவந்தாள்
'மிஞ்சி'
இருவருமே
வாழ்க்கையில்
ஒட்டியாகணும்
என்பதனால்
அவள் பின்னர்
அணிந்து வந்தாள்
'ஒட்டியாணம்'
இப்படியே ஒவ்வொன்றாய்
வந்த ஒன்றும்
ஒவ்வொன்றாய்
குடிக்காக
மார்வாடியை
நோக்கிச் செல்ல
அந்தக் கணவனே
அவள் கண்முன்னே
அவளை விதவையாக்கினான்

உரையாடல்கள்

'என்ன தொகை
வேண்டும்?'
என்றார் சம்பந்தி.
'பைங்கிளி'
அவளின்
'பண்புத் தொகை'
ஒன்றே போதும்'
என்றார்
பையனின் தந்தை.
'பிறகு
பெண்ணை
'ஊறுகாய்' ஆக்கி
மேலும் மேலும்
'வினைத்தொகை'
கேட்கமாட்டீர்களே!
என்றார்
பெண்ணின் தந்தை

மேலிடங்கள்

'காந்தி' தந்த
சுதந்திரத்தை
மறந்துவிட்டு

இவர்கள்
'சாந்தி' காணும்போது
அதைச்
சந்திக்கின்றனர்.

காதல் தேர்தல்

உந்தன் வாக்கு
எனக்குத்தான் என்றுய்
உறுதியாய் இருந்தேன்
ஆனல், நீ
யாருக்கோ
வாக்களித்து விட்டாயே!

ஓரேழுத்து மந்திரம்

மாது —
காலை அகற்றினல்
'மது'வாகிருள்.

புதுமைக் கருத்து

'இரண்டுக்குமேல்
எப்போதும் வேண்டாம்'
என்றே
அரசாங்கம்
சொன்னமையால்
மூணும்தாரம்
நான் செய்துகொள்ளவில்லை
என்ருர்
ஒரு வயோதிகர்

யாவுமாய் ....

தென்றலுக்குக் காலில்லை
திங்களுக்கு ஒளியில்லை
பொன்னிற்கு நிறமில்லை
பூவிற்கு மணமில்லை
கனிகளுக்குச் சுவையில்லை
சொர்க்கத்திலே சுகமில்லை
அதோ —
அவளே அத்தனையையும்
தாங்கிக் கொண்டு
வருகிருள்.

முன்னுக்குப் பின்

காதலிக்கும் முன்
அவள் 'மாக்னெட்'
கல்யாணத்திற்குப் பின்
அவள் 'சயனெட்'

சொரூப(ண)ம்

அவள் அங்கத்தில்
அணுவளவு
மாற்றம் ஏற்பட்டால்கூட
அவள் அழகு
சிதைந்து விடும்
கண்ணுடியில்
ஒருமுறை மட்டும்
ஆணி அடித்தால்
எப்படியோ?
அப்படியே!

காதல் - தெய்வீகம்

அவளைப் பின்தொடர்ந்தே
நானும் எனையறியாமல்
கோவிலுக்குள்
சென்றமையால்

'நாஸ்திகனென'
என்னை அவள்
'ஆஸ்திகன்'
ஆக்கிவிட்டாள்.

உண்மைதான்

அவளை
'ரோஜாப் பூ'
என்றேன்
குத்துகிறாள்
அருகே
முள்ளிருக்குமாம்.

சரியே!

பெண்கள்
ஆம் —
பெண் கள் தான்
போதையைத்
தூண்டுவதால்.

விசாரணை

அவளைப்
'பேரழகு பேரழகு'
என்றார்கள்.
தீரவிசாரித்த போதுதான்
தெரிந்தது
அவள்
பெயர் 'அழகு' என்று

அவளும் தமிழும்

வெள்ளி நிலா
அவளின்
வதனம் கண்டால்
வெடித்து விடும்.
இளஞ்சூரியன்
அவளின்
இளமை கண்டால்
குளிர்ந்துவிடும்
தென்றலது
அவளின்
தேகம் தொட்டால்
கரைந்துவிடும்.
பூக்களெல்லாம்
அவளின்
கூந்தல் பட்டால்
புத்துணர்ச்சி பெறும்.
தங்கமது
அவளின்
தேகம் தொட்டால்
தலை குனியும்.
வைரமது
அவளின்
சொருபம் கண்டு
சொக்கிவிடும்
இத்தனையும்
அவளுக்குள்
தஞ்சம்தான்.
ஆனால்,
சங்கத் தமிழதனை
அவளொரு நாள்
தொட நேர்ந்தால்
'சரணம்' ஆகிடுவாள்
என்றே நானுரைப்பேன்.

விதிமுறை

ஆண்கள் —
இரும்பாக
இருக்கும் வரை

பெண்கள் —
காந்தமாகத்தான்
இழுப்பார்கள்.

இவர்கள் .... இப்படி ....

கன்னியர்
நாங்கள்
பிறவி ஊமைகளல்ல.
வரதட்சணைப் பேய்
எங்களை
அதிர்ச்சியடைய
வைத்துவிட்டதால்
நாங்கள் இங்கே
இடையிட்டு
ஊமைகளானோம்
அதனால்
நாங்கள்
'பௌர்ணமிக் கனாக்கள்'
காண்கின்றோம்.
'அமாவாசை வாழ்க்கை'
வாழ்கின்றோம்.
நாங்கள்
பிறவிக் குருடர்களல்ல.
சீர்வரிசைகள் எனும்
தொடர் மின்னல்கள்
தாக்கியதால்
இங்கே இடையிட்டு
நாங்கள்
குருடர்களானோம்.
நாங்கள்
பிறவிச் செவிடர்கள்
அல்ல.
மாப்பிள்ளை செட்
என்னும்
இடி தாக்கியதால்
நாங்கள் இங்கே
இடையிட்டுச்
செவிடர்களானோம்
நாங்கள்
ஊனமானவர்களல்ல
ரொக்கம்,
நகைகள்,
சாமான்கள்
ஆகிய பல்வகைப்பட்ட
கட்டுக்களை
இங்கே எங்களுக்கு
போட்டுவிட்டதால்
நாங்கள்
இடையிட்டு
ஊனமானோம்
அதனால்
நாங்கள்
'பௌர்ணமிக் கனாக்கள்'
காண்கின்றோம்.
'அமாவாசை வாழ்க்கை'
வாழ்கின்றோம்.

(வே)சாதனை

எனது
தூய காதலைத்
துப்புத் துலக்க
துரிதமாய்த்
தூதுவிட்டேன்
அவளோ
'தூத்தூ' ......
என்றே
துப்பிவிட்டாள்

ஒன்றுதான் — ஆனால்,

அவள் —
ஐம்பது கிலோ தங்கம்.
அதனால்தான்
நான்
ஐம்பது கிலோ
மண்ணாகிப் போனேன்

மனநிலை

வானவில்லில்
வண்ணங்களோ
ஏழு.
அவளின்
எண்ணத்தின்
வண்ணங்களோ
ஏராளம் ஏராளம்

கப்பலும் காதலும்

நீரில்
மிதந்தால்தான்
'கப்பல்'
பயணிக்கிறது.
இதயங்கள்
மூழ்கினால்தான்
'காதல்'
பயணிக்கிறது.

வாகை சூடியவள்

அவள் தோற்றம் முன்
நான் தோற்றேன்.
அதனால் அவள்
வெற்றிப் பூ - சிரிப்பு
சூடலுற்றாள்.

காதல் துணைவி

என்னை
மிதி, அடி
பரவாயில்லை
ஆனாலும்
உனக்கு
நான்தான்
'மிதியடி' யாக
உழைக்கிறேன்.

இல(க்)கியம்

இரண்டு
இளைய இதயங்கள்
இணைந்தால் போதும்
அங்கே —
இலக்கியம் தோற்றுவிடும்.

கொசுவுக்கு ஒரு தாலாட்டு

கொசுவே !
நீ ஏன்
இந்தியாவில்
பிறந்துவிட்டோம்
என்ற வருத்தத்தால்
எங்களைக் கொல்லுகிறாய்?
உனக்குத் தெரியும்
இந்தியனின் உடம்பினிலே
ரத்தமில்லை என்று
இருந்தாலும்
'தேசப்பற்று'
உன்னை விடவில்லை

அண்டைவீடே
உனக்கு
அயல் நாடாய்
இருக்கும்போது
எங்கள் வீட்டிலேயே
தங்கிவிடு.

ஆனல்,
இரவில் மட்டும்
எனைக் கொஞ்சம்
தூங்க விடு.

சிகரெட்டின் கீதம்

ஆடவர்களே
என்னுடைய
வாரிசுகள்.

காரணம்,
அவர்கள்
என் தலையில்
கொள்ளி வைப்பதால்

அடக்கம்

சுதந்திரப் பறவைகளே
என்றதும்
சிறகினை விரித்துவிடாதீர்!

சிறகுகள்
கொடுத்தது வாஸ்தவம்தான்

அதை
சுருக்கி
வைத்திருப்பதில்தான்
சுதந்திரமே
அடங்கியிருக்கிறது.

பிரமுகர்கள்

கடன் —
கேட்டால் மறுக்கிருர்கள்
கொடுத்தால் மறக்கிருர்கள்

நவீனப் பாஞ்சாலி

'அவிழ்ந்த கூந்தலை
முடியேன்'
என்றுரைத்த
பாஞ்சாலி
இன்றிருந்தால்
'ஒட்டுக் கூந்தலைத்
தொடேன்'
என்றுரைப்பாள்.

சூசகம்

வறுமையால்
வாடியபோது
சோதனையிட்ட
மருத்துவர்
'ஒன்றுமில்லை'
என்று சொன்ஞர்.

'என்னுடைய
'சட்டைப் பையிலா'
என்றேன் நான்.

வீட்டாளனின்
வீராவேசம்

என் வீட்டில்
என்றும் நான்,
'கொத்தடிமை'தான்.

ஆனால்,
திருமணம் மட்டும்
'சுதந்திர தின'த்தன்று
நடந்தது.

அன்பும் — அம்பும்

என் பார்வை
சல்லடையாய்ப்
பதிந்தபோது
அவள் பார்வையோ
துப்பாக்கியாய்த்
துளைத்தது.

இருபதாம் நூற்றாண்டில் சரிநிகர் சமானம்

அதிகாலையில் தலைகுளித்து
வாசல் பெருக்கி
நீர் தெளித்து
சாணமிட்டு
கோலம் போட்டு
பிறகு
பாலை வாங்கி
காபி போட்டு
படுக்கை அறையில்
சென்று கொடுத்து
சட்டி முட்டிகள்
கழுவி விட்டு
சமையலறை நுழைந்து
அடுப்பு மூட்டி
சாதம் செய்து
இடைப்பட்ட
நேரத்திலே
துவைத்து முடித்து
துவையல் அரைத்து
துடைப்ப மெடுத்து
துப்புரவு படுத்தி
காய்கறி நறுக்கி
வேகவைத்து
காலைப் பலகாரமும்
சேர்த்துச் செய்து
களைப்புடன் நான்
யாவும் முடித்து
கனிவாய்
படுக்கையறைக்குள்
பதுங்கிச் சென்று
'என்னங்க
இன்னுமா
தூக்கம் போகலை'
என்றே சொல்ல
'அப்பப்பா
உங்களுக்கு
இதே பொழப்பாப்
போச்சென'
கடிந்து எழுந்தாள்
என் மனைவி

வளர்ச்சியும் வறட்சியும்

அவள்
கன்னியாய் வந்தாள்
கவிதை வந்தது
கலந்து கொண்டாள்
காதல் வந்தது
துணையாய் நின்றாள்
எல்லாம்
துவண்டு போனது

மேடு பள்ளங்கள்

ஒருபுறம் அஜீரணம்
ஒருபுறம் பட்டினி
இந்த வயிறுகளை
வைத்துத்தான்
'ஏற்ற இறக்கங்கள்
நிறைந்தது உலகம்'
என்றனரோ?

இந்தியன்

எமக்குத் தொழில் 'குடி'
நாட்டைக் குலைத்தல்
இமைப்பொழுதும்
சாராதிருத்தல்.

விடியலுக்கோர் வினா

ஏழைக்கும் சேர்த்து
ஏன்தான்
பொழுது விடிகிறதோ?
யாரே பதில் அளிப்பார்!

பட்டினிக் கொடுமை

பசிக்கொடுமை'
பற்றி எழுதக்
காகிதம் எடுத்தான்
கவிஞன் ...

என்னே கொடுமை!
எடுத்த காகிதத்தை
அவனே தின்றான்.

தமிழின் தாத்பர்யம்

'உண்மை'க்குக்
காலில்லை
எனவே அது
ஊமையாகி விடுகிறது.

'பொய்மை'க்குக்
காலுண்டு
அதனால்தான் அது
பவனி வருகிறது.

எழுத்து ஜாலம்

கடன் சுமைதான்.
காரணம்,
க'டன்' அல்லவா?

தீபாவளி

ஏழையை
அடையாளம் காட்டும்
ஒரு எட்டப்பன்தான்
இந்தத்
தீபாவளிப் பண்டிகை.

பஞ்சமும் பகட்டும்

உடையின்றி
உள்ளத்தால்
வாடுகையில்
கற்சிலைக்கும்
கடைப் பொம்மைக்கும்
கல் தூணுக்கும்
உடையலங்காரம்.

அவன் விதி

என் மனைவியின்
ராட்சச குணத்திற்கு
பயந்து நான்
'ஆயுள் காப்பீட்டுக்
கழகத்தின்'
பாலிஸிதாரர் ஆனேன்.

எனது துணிவு

நான் யாரைக்கண்டும்
பயப்படமாட்டேன்

காரணம்,
அவர்கள்
பேயோ பிசாசோ
மிருகங்களோ அல்ல.

அவர்களும்
'மனிதர்களே!' என்பதால்.

பசுமை போய் பசி சுமை

பசியால் கையேந்திய
குழந்தைக்கு
ஒரு ரூபாய்
நாணயம் கொடுத்தேன்.

பாவம்,
சுமை தாங்காமல்
குழந்தை
கீழே விழுந்தது.

ஏழ்மையின் முதிர்ச்சி

சுப்பிகள் பொறுக்கி
கிழவி சோறு
சமைத்தாள்.

பாவம் —
அவளுக்குத்தான்
இன்னும்
வாழ்க்கை வரவில்லை.

ஆதலால்தான்,
அந்த சுப்பிகட்கு
வாழ்க்கை கொடுத்தாள்.

இதுதாண்டா உலகம்

நிற்கும்போது
எனக்கு
மாலை போடுவார்கள்
என்று நினைத்தேன்.

பாவி மக்கள் —

என்னைப்
படுக்க வைத்துத்தான்
மாலை போடுவார்கள்
போலிருக்கிறது.

இந்தியா டுடே ...

அன்று
'மங்கையராய்ப்
பிறப்பதற்கு
மாதவம் செய்ய
வேண்டும்'
என்றான் பாரதி

இன்று ...
மாதவம் செய்கிறார்கள்
'மங்கையராய்ப்
பிறக்க வேண்டாம்' என்று.

நிம்மதி

இதயம் —
அது இதமாக
இருந்தால்தான்
குளிர்ச்சியே!

அதுவே
ஈயமானல்
யாவுமே
வெப்பம்தான்

புதுக்குறள்

அன்பும் அறனும்
உடைத்தாயின்
இல்வாழ்க்கை
பட்டினியும்
பஞ்சமும் அது

இலஞ்சம்

அதுவின்றி
ஓர் மனுவும்
அசையாது.

விநோத வள்ளல்

கஞ்சம் பிடிப்பதிலும்
பஞ்சம் பாடுவதிலும்
அடடா! —
அவன் ஒரு வள்ளல்.

விண்ணில் தீபாவளி

செவ்வானமெனும்
'கோடி' கட்டி
இடியெனும்
'வெடி' வெடித்து
நட்சத்திரம் எனும்
'பட்சணம்' உண்டு
வானத்து
வஞ்சிமகள்
விண்ணில் தீபாவளி
கொண்டாடுகிருள்.

மண்ணில்
ஏழ்மைத் தீபாவளி

வெடிகேட்ட
மகனுக்கு
அடி —
அதுதான் 'வெடி'

கந்தலே
அன்றுதான்
கசக்கிக்
கட்டுவது —
அதுதான் 'கோடி'

கேப்பைக் கூழும்
ரவையும்தான்
அன்றையப்
'பட்சணங்கள்'

ஆடவர்

ஆண்மகன்
ஆவதும் பெண்ணுலே
அவன் வளர்ந்ததும்
அழிவதும் பெண்ணுலே

பயணங்கள் முடிவதில்லை.

வாழ்க்கை —
முதல்தர
வர்க்கத்தினருக்குப்
ப(ய)ணம்

நடுத்தர
வர்க்கத்தினருக்குப்
ப(ண)யம்.

கடைத்தர
வர்க்கத்தினருக்கோ
ம'ரணம்'.

தடு — மாற்றம்

மேலே
ஆகாயத்தைப்
பார்த்துக் கொண்டே
நடந்தான் ஒருவன்
கீழே விழுந்தான்.

இப்பொழுது
ஆ! காயத்தைப்
பார்த்துக் கொண்டே
நடக்கிறான்.

பரிசோதனை

மனிதர்கள் —
இவர்களைச்
சோதிக்கிறபோதுதான்
மனிதர் 'கள்'
என்றே
தெரிய வருகிறது.

ஏழையும் - அல்வாவும்

வாழ்க்கை
கசந்துவிட்டது.

வாயையாவது
இனிக்கவிடுங்கள்.

விதிவிலக்கு

மனிதன் —
ஆசை வைக்காதது
மரணத்தில் மட்டும்தான்.

ஆனால்,
நான் ஆசை வைப்பதோ
மரணத்தில் மட்டும்தான்.

வித்தியாசம் பெரிதல்ல

ஏழை —
கவலையோட வாழ்கிறான்.

செல்வன் —
கவலை ஓட வாழ்கிறான்.

புதுமொழி

'ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காணலாம்'

உண்மைதான்
வறுமையின் அழுகையால்
ஏழை(யை)யே
காணவில்லையே!

அடக்கம்

யானைக்கு அங்குசம்
மனிதனுக்கோ 'பெண்'குசம்

போலிகள்

பேசும்போது
'அலங்காரமாய்'ப்
பேசுவார்கள்.

நமக்குக்
கஷ்டங்கள் வந்து
சோதிக்கும் போதுதான்
அவர்களின்
'நிர்வாணம்'
வெட்ட வெளிச்சமாகிறது.

ஏழையும் செல்வனும்

எங்களுக்கு
'முதல்தேதி' எல்லாம்
'முப்பதாம் தேதி'

ஆனால்,
அவர்களுக்கோ
முப்பதாம் தேதிகூட
'முதல் தேதியே!'

யார் கிறுக்கு?

'தமிழ்! தமிழ்!!
என்று
கிறுக்கித் திரிந்தே
கிறுக்கனாகப்
போகிறாய்' என்கிறார்கள்.
அவர்களுக்குத்
தெரியாது
என்னையே பிடித்து
ஆட்டு ஆட்டென்று
ஆட்டுகின்ற
தமிழுக்குத்தான்
கிறுக்குப் பிடித்ததென்று.

வறட்சி

நிலவே!
நீ ஏன் கரைந்தாய்?

ஓ!

மாதக் கடைசி
என்பதாலோ?

கடலும் கவிஞனும்

கடலைவிட ஆழமான
கருத்துக்களும்
அகலமான உணர்வுகளும்
நீளமான எண்ணங்களும்
கவிஞனுக்கே உண்டு.

படும்பாடு

ஏழையவன்
விளுடி முள்ளாய்
அலைந்து திரிகிறான்.

அதனால்தானே
இந்த சமுதாயம்
அவனைக்
கண்டுகொள்ள மறுக்கிறது

வேலையில்லாப் பட்டதாரிகள்

நாங்கள் —
தரையில் அலையும்
மேகங்கள்.

எங்களுக்கு
நாளெல்லாம் ஞாயிறே.
நாங்களும் அகதிகளே.

வேலை பார்ப்பவருக்கு
எட்டு மணிநேர வேலை.

வேலையைத் தேடும்
எங்களுக்கோ
இருபத்திநாலு
மணிநேரமும் வேலையே!

சமுதாயப் பார்வைக்கு
நாங்கள் நிர்வாணமே!

இலஞ்சங்கள் —
வேலைக்கு முன்னுரிமை.

சிவார்ஸ் —
தகுதிச் சான்றிதழ்.

இப்படியானால்
எங்களுக்கென்ன
ஆதாரங்கள்?

அதனால்தான் நாங்கள்

வேலை விஷயத்தில்
என்றும் மார்க்கண்டேயனாய்
இருக்கின்றோம்.

எங்கள் நிலை
கோடிட்ட இடம்.

யார் வந்து
நிரப்புவது?

கொடுத்தால்
நிரப்பிக்கொள்வார்கள்.

பின்னர்
கொழுப்பால்
பேசச் செய்வார்கள்.

'காசைக்' கொடுத்து
'பிசாசை' வாங்குவானேன்.

எங்கள்
அதரங்கள் துடிக்கின்றன.

அதற்கேற்ற
ஆதாரங்கள் இல்லையே!

நம்பிக்கை இருக்கிறது.
ஒரு
நட்புக்கைகூட இல்லையே.

நிலவு —
தேய்ந்தாலும் வளர்கிறது.

எங்கள் வாழ்வு
தேய்ந்து கொண்டே
இருக்கிறதே.

அதனால்தான் கவலை
வளர்ந்து கொண்டே
இருக்கிறது.

எங்களுக்குத்
தலை கொடுக்க
யாரும் வருவதில்லை?

மாறாக,
சூரசம்ஹாரம்
செய்கின்றனர்.

அவர்கள் நரகாசூரர்கள்
நாங்கள் நகரா சூரர்கள்
இறுதிவரைப் போராட்டம்

அந்தக் கொசுக்கள்
ஒழியும்வரை
இனிப் புகைமூட்டம்.

அபலைப்
பெண்ணொருத்தி ...

திராவக நீரை வடிக்கின்ருள்

அதோ ஓர்
அபலைப் பெண்ணொருத்தி
திராவக நீரை வடிக்கின்ருள்

தன்னுடைய
வாழ்க்கை நேர்கோடு
தடைப்பட்டு
விலகியது குறித்து
விம்மி அழுகிருள்.

பெய்த மழையைப்
பேய்க் காற்று
தடுத்ததெனப்
பேதை குமுறுகிருள்.

ஊழல் கூட்டமொன்று
உறுமி அருகில்வந்து
உருமி அடித்ததென
எண்ணி உக்குகிருள்.

நோட்டுக்கள்
ரெக்கையானல்தான்
கூட்டுக்குள் போகலாமென
குயில் எண்ணிக்
கலங்கிய படியே

திராவக நீரை வடிக்கின்ருள்

அதோ ஓர்
அபலைப் பெண்ணொருத்தி
திராவக நீரை வடிக்கின்ருள்

தாலாட்டுப் பாடும்
பருவத்தில்
அவளிங்கே
ஒப்பாரி வைக்கின்ருள்.

அவள்
சங்கீதம் கேளாமல்
ஒரு
சந்தைக்குள்
நுழைந்துவிட்டாள்.

மஞ்சள் கயிற்றை
நாணி நோக்காமல்
ஒரு தூக்குக் கயிற்றைத்
துணிந்து நோக்குகிருள்

அவள்
கங்கைக்கு யாத்திரை
செல்லாமல்
கூவத்தை நோக்கி
ஓடுகிருள்.

அதனல்

திராவக நீரை வடிக்கின்ருள்

அதோ ஓர்
அபலைப்
பெண்ணொருத்தி
திராவக நீரை வடிக்கின்ருள்

பருவத்தில் பச்சையானள்.
பணத்தாலே
பட்டுப்போனள்.

ரொக்கம், நகை, சாமான்கள்
அவளை அஃறிணையாக்கி

அவைகள்
உயர்திணையாகின

அவள் — ஒரு பொருள்

அவை — இங்கே உயிர்.

அவள்
சந்நிதிக்கு வருவதறிந்து
கதவைச் சாத்தியது யார்?

கற்கண்டாய்
வளர்ந்த அவளை
கல்கொண்டு எறிவது யார்?

விளக்கேற்ற வருபவளை
விளங்காமல்
விபரீதமாய் எரிப்பது யார்?

முத்தெடுக்க வரும் அவளை
முட்டாள்தனமாக
மூழ்கடிப்பது யார்?

புதையலாய் வரும் அவளை
புதைத்து வைத்தே
புண்படுத்துவது யார்?

மலரைப் பறிக்க வந்த
மங்கை அவளை
முள்ளால் தைத்தது யார்?

நமக்குள்ளே
ஒரு 'எட்டப்பன்'

'அவன்'
அல்லது
'அவள்'
யார்?

எண்ணிப் பார்த்தால்
'வினு' எழும்பும்

துருவிப் பார்த்தால்
'விடை' கிடைக்கும்

இதையெல்லாம்
சார்ந்தோரும், சான்றோரும்
எண்ணுததாலே

திராவக நீரை வடிக்கின்ருள்

அதோ ஓர்
அபலைப் பெண்ணொருத்தி
திராவக நீரை வடிக்கின்ருள்

சேலைக்குள் பொற்சிலையாய்
இருக்கவேண்டிய அவள்
மரப்பொம்மை ஆனுள்

சோலைக்குள் பூக்களாய்
மணக்கவேண்டிய அவள்
காவல்காரனுய் ஆனுள்

சாலைக்கு வழிகாட்டியாய்
இருக்கவேண்டிய அவள்
வேகத்தடை ஆனுள்.

காலைக்கும் மாலைக்கும்
வேலைக்கோர் விதமாய்
போன அவளும்
நாளைக்கு என்ன ஆவாள்?

நாமறியோம்.

அவளறிவாள்

அதனுல்தான்
திரவாக நீரை வடிக்கின்ருள்

அதோ ஓர்
அபலைப் பெண்ணொருத்தி
திராவக நீரை வடிக்கின்றாள்

அவர்கள்
பெண்ணைப் பார்க்க
வருவதில்லை.
பெறுமானம் பார்க்க
வருகின்றார்கள்.

திருமணம் பேச
வருவதில்லை

பெரும் பணம் பேச
வருகின்றார்கள்.

சொல்வதைக் கேட்க
வருவதில்லை

சொத்துக்களையே கேட்க
வருகின்றார்கள்.

எடுத்துச் சொல்வதையும்
எடுத்து எறிகிறார்கள்.

என்ன செய்வது?

அவள் —
முகவரி எழுதாத
கடிதமானாள்.
அதான்
மூலையில் கிடக்கின்றாள்.

கையெழுத்திடப்படாத
காசோலையானாள்
அதான்
காகிதமாய்க் கிடக்கின்றாள்.

அச்சடிக்கப்படாத
கவிதையானாள்
அதான்
அனாதையாய்க்
கிடக்கின்றாள்.

சஞ்சலத்தால்
வற்றிய நதியானாள்
அதான்
இறங்கி நடக்கிறார்கள்.

வதங்கிய
பூவானாள்
அதான்
ஏறி மிதிக்கிறார்கள்.

குறைமச்சப் பொன்னானாள்
அதான்
கூட்டிக் கழிக்கிறார்கள்.

விலைமதிப்பில்லாப்
பெண்ணவளும்
விலையின்றி நிற்கின்றாள்.

கலைமகள் —
வீணையை இழந்ததுபோல்

திருமகள் —
தாமரையை இழந்ததுபோல்

மலைமகள் —
மலையை இழந்ததுபோல்

மங்கையவள் —
தன் கோலத்தை
இழந்ததனால்

திராவக நீரை வடிக்கின்றாள்

அதோ ஓர்
அபலைப் பெண்ணொருத்தி
திராவக நீரை வடிக்கின்ருள்

அவள் —
அந்தரத்தில் ஆடுகிருள்
நாம் —
படுத்துக்கொண்டே
ரசிக்கின்ரும்

இப்படி அவளை
மாடாக
அடித்துக்கொண்டே
எத்தனை காலம்தான் நாம்
பந்தயக்காரன்
வாழ்க்கை வாழ்வது.

இந்த நிலையில்
அவளைப் பார்ப்பவர்கள்
ஏதோ
நிர்வாணத் தோற்றத்தைப்
பார்ப்பவர்கள் போலல்லவா
பார்த்து கேலிச்
சிரிப்புச் சிரிக்கின்ருர்கள்.

அவளுக்குக்
கணவன் என்னும்
சேலையைக்
கட்டிவிடுவது யார்?

அந்த அமாவாசை
பௌர்ணமியாவது தவரு?

ஓர் காய்
கனிய தடை செய்யலாமா?
ஒரு மொட்டு
மலரத் தடுக்கலாமா?

சிந்திக்க வேண்டியவர்கள்
சிந்தித்துச்
செயல்பட வேண்டும்

என்றே எண்ணியவளாய்
திராவக நீரை வடிக்கின்ருள்

அதோ ஓர்
அபலைப் பெண்ணொருத்தி
திராவக நீரை வடிக்கின்ருள்

கன்னியின் பாலைவனப் பயணம்

நாங்களும்
பாலைவனத்தில்
பயணிக்கிரேம்
எங்கள் —
எதிர்காலம்
இலையுதிர்காலமானதால்
வசந்தத்தை எண்ண
இன்னும்
வசதிகள் வரவில்லை.

பாழ்பட்ட வாழ்க்கைக்கு
பால்வார்க்க யார் வருவார்?

பழிபோட்டுப் பேசத்தான்
பட்டாளம் திரள்கிறது.

பாவங்கள் பசுமையாய்
பவனி வருவதால்
புண்ணியம் புலித்தோல்
போர்த்திய
பசுவாய்ப் போனது.

ஒட்டகங்கள்
நீரருந்தாமல்
நெடுநாள் வாழுமாமே!

நாங்களும்
பூச்சூடாமல்
புவியில் வாழுகிறோம்.

ஒட்டகம்
பசிதாங்குமாமே.

நாங்களும்
உயிர்தாங்குகிறோம்.

ஒட்டகம்
விலங்குகளிலே
விநோதமானது.

நாங்களும்
மனிதர்களிலே
வித்தியாசமானோம்

இப்படி நாங்கள்
ஒட்டகத்துடன் ஒட்டகமாய்
ஆனதால்தான்

நாங்களும்
பாலைவனத்தில்
பயணிக்கிறோம்.

எங்கள் —
எதிர்காலம்
இலையுதிர்காலமானதால்
வசந்தத்தை எண்ண
இன்னும்
வசதிகள் வரவில்லை.

முனிவரின் சாபத்தால்
அகலிகை கல்லானாள்
பின் ராமனால்
பெண்ணானாள்.

வரதட்சணை சாபத்தால்
நாங்கள் கன்னியானோம்

யாரே எங்களைப்
பெண்ணாக்குவர் ?

வில்லுடைத்து
ராமன் சீதையை
மணந்தான்

லாக்கரை
உடைத்தல்லவா
இவர்கள் எங்களை
மணக்கப் பார்க்கிறார்கள்.

'சக்தி'
தன் மேனியில்
பாதியைத்தான்
சிவனுக்குத் தந்தாள்.

நாங்களோ
எங்கள் மேனி
முழுவதையும் தருகிறோம்

வருவாரில்லை.

வந்தாலும் பெறுவாரில்லை.

பணம் காட்டினால்தான்
பற்களைக் காட்டுவோம்
என்றால்
பந்தத்திற்கே வேலையில்லை.

நாங்கள் —
பாலைவனத்திலேயே
பயணித்துக்
கொண்டிருக்கிறோம்.

மக்களும்
சினிம(ா)க்களும்

திரைப்படங்கள்
அன்று
தித்திப்பைத் தந்தன.

இன்றோ
தீப்பிழம்பாயின.

குடும்பத்துடன்
பார்ப்பவர்கள்
கூச்சப்பட்டுக்
கூனுகின்றனர்.

கறுப்பு வெள்ளை
காலத்தில்
கவர்ச்சி இல்லை.

கலர்காலம் வந்ததும்
இங்கே
கலிகாலம் முற்றலானது.

தியேட்டர்கள்
படுக்கை அறைகள் அல்ல.

அவை
பூஜையறையாக்கப்பட
வேண்டும்.

திரைச்சீலைகள்
வெண்மையாய்
இருப்பதுபோல் அது
பார்ப்பவர்
உள்ளத்தையும்
வெண்மையாக்கிட
வேண்டும்.

படங்கள்
பாடங்களாய்
அமையாமல்
சீர்கேட்டிற்கே
சிந்தனை வகுக்கிறதே!

பல லட்சங்கள்
முதலீடிட்டும்
சிறு லட்சியங்கள்
ஏதுமில்லாததாலே
திரைப்பட லட்சணங்கள்
இப்படிச்
சீர் கெடுகிறது.

கிளுகிளுப்பூட்டும்
காட்சிகளால்
கின்னஸ் சாதனை
பெறப் போவதில்லை

டிஸ்யூம் டிஸ்யூம்
சண்டைகளால் மட்டும்
டிக்கெட்டுகள்
கிழிபடுவது
நிறுத்தப்பட வேண்டும்.

நம் காசுகள்
கருத்துக்களைச்
சேகரித்துத்
தரவேண்டும்.

அது கரியாக
விரயமாகக்கூடாது.

நான்
கட்டளை இடவில்லை.
கடுமையாக
விண்ணப்பமிடுகிறேன்.

சினிம(ா)க்கள்
இனியாவது
சிறுர் முதல்
மற்ருேர் யாவரையும்
சிந்தனைச் சிற்பிகளை
உருவாக்கிடும் வகையில்
அதனைச்
செப்பனிட்டுச்
சீரமைத்திடல் வேண்டும்.

வேண்டுகோள்

முன்னரே
ஏன் அடைத்துள்ளீர் ?

நான் 'அடைக்கலம்'
என்று வந்த பின்னரே
நீங்கள்
கதவினை 'அடைக்களாம்.'

செப்படி — வித்தை

அவள் தோற்றம்
ஏற்றம்தான்
அதனுல்தானே
என் மனம்மாற்றம்.
இறுதி முடிவோ
ஏமாற்றம்.

காதல் — தேன்

அதோ —
அந்த இலைகள்கூடப்
பசுமையாய் இருக்கின்றன.

ஆனுல் நானே
அவள் நினைவால்
வாடிப் போயிருக்கிறேன்.

அதோ —
அந்த வானம்கூட
எங்கோ
சென்றுகொண்டிருக்கின்றன.

ஆனுல், நானே
அவள் நினைவால்
செயலற்றுப்
போயிருக்கிறேன்.

ஆயுள் ரேகை
பலமாய் இருந்தால்தான்
நீண்ட நாள்
வாழலாம் என்கிருர்கள்

அவளின்
கைரேகை
பலமாய் இருந்தால்
அதுவே போதும்

என் ஆயுள் நீடிக்கும்

அவள் —
வாய்விட்டுச்
சிரித்தபோதுதான்
அவளுடைய
பரிபூரண இதயத்தை
என்னுல்
பார்க்க முடிந்தது.

ஆஹா !
அவள் ஒரு
அட்சய பாத்திரம்தான்

நான்
விரும்புகிற
நேரத்தில் எல்லாம்
என் பக்கத்திலேயே
இருப்பதால்

அவளே
சீதையாக
அவதரித்த பின்னும்
ஏன்
கம்பனை இன்னும்
காணவில்லை ?

ஓ !
நான் ராமனில்லை
என்பதாலா ?

அவள்
நிற்கின்ற இடமெல்லாம்
பிருந்தாவனம்.

அவள்
இமயத்தில்
ஏறவேண்டுமென்றால்கூட
அது
சிறிதாகக்
காத்துக்கொண்டிருக்கிறது.

கடலில் விழுந்தால்
தண்ணீரே
அவளைத் தாங்கிவந்து
கரைசேர்க்கும்.

எரிமலைகூட
இவள் வரவால்
குளிர்ப்பிரதேசமாகும்.

அதுதானே
காதலின் இலக்கணம்.

இமாலயக் கவிஞன்

கண்ணதாசா !

சேவல்கூவி
ஜெகமே விழித்ததுபோல்
செப்பும் கவிதைகளால்
ஜெகத்தை
விழிக்கவைத்தாய்.

‘ஆல் இண்டியா ரேடியோ’
என்ற வாசகத்தைவிட
உன் நாமத்தைத்தானே
அனுதினமும்
அத்தனை நிலையங்களும்
விமர்சித்துக்
கொண்டிருக்கின்றன.

தானகப் போவோனுக்கும்
உன் பாடல்கள்
தேனகப் பாய்ந்து
தித்தித்ததன் மர்மமென்ன ?

பச்சைக் குழந்தைகூட
பால்நிலவைப் பாராமல்
உன்பாடல் கேட்டு
மௌனமானதென்ன ?

‘போனல் போகட்டும்
போடா’
என்ற வாசகத்தில்
ஞானியின் போதனையை
எங்கோ வைத்தாய்.

'எங்கே நிம்மதி?'
'யாரை நம்பி
நான் பிறந்தேன்'
இந்தப் பாடல்களில்
உன் உணர்ச்சிகளை
மட்டுமல்ல
இந்த உலகோரின்
உணர்ச்சியையே
உத்வேகமாய்
வெளிக் கொணர்ந்தாய்

இப்படியாக,

எண்ணற்ற
கவிதைகளை மட்டும்
நீ உருவாக்க உருவாக்க
அதனால் எண்ணற்ற
கவிஞர்கள் உருவாகினர்.

சமுதாயக் கப்பலுக்குக்
கலங்கரை விளக்கமாய்
'அர்த்தமுள்ள இந்துமதம்'
படைத்திட்டாய்.

'மாங்கனி தைப்பாவை' என
மாபெரும் தமிழுக்கு
மகாத்மியம் செய்திட்டாய்.

கண்ணதாசா!

உன்னைக் காலன்
கவர்ந்ததால்தான்
கணவனை இழந்த
கலைமகள் இங்கே
வெள்ளாடை
பூண்டிருக்கிறாளோ?

கவிஞா!
நீ இறக்கவில்லை
உன் கவி இறக்கவில்லை.
உன் மறைவால்
கவிதை இங்கே
காய்ந்து போனது
உண்மைதான்.

இமாலயக் கவிஞனே!

கவி உலகிற்கு
நீயோர் வழிகாட்டி.

நான் உன்னால்
பயணிக்கிறேன்.

அமில ஊற்றுக்கள்

வெள்ளையனை
விரட்டக்கூடிய அளவிற்கு
வெப்பக் கவிதைகளை
விளைவித்தவன்
பாரதி

அல்ல அல்ல.

அவன் ஒரு பரிதி.

அவன் படைப்பில்தான்
'பா' ரதியானாள்.

பகைவனோ
பாதியானான்.

அதனால்தானே
'பா' வெனும்

பாவைக்கு
பதியானான் பாரதி.

'ஆசையைக் கொல்வோம்'
என்றாய் நீ.
இங்கே இவர்கள்
ஆசையே கொள்கிறார்கள்.

'மோசம் செய்யாதே'
என நீ மோகனமாய்ச்
சொன்னபோதும்
நேசம் கொண்டே
நித்தமதைச் செய்கின்றனர்.

'சோம்பல் அழியும்
உடல்
சொன்னபடி கேட்கும்'
என்றாய்.

இவர்களோ
'காசு அழியும் —
மனம்
சொன்னபடி கேட்டு'
என மாற்றிவிட்டனர்.

'பாதகம் செய்வோருக்குப்
பயப்படாமல் அவர்களை
மோதி மிதித்தே
முகத்தில்
உமிழச் சொன்னாய்.

அப்படிப் பார்த்தால்
அனேகம்பேர்
இங்கே
அசிங்கப்பட்டுப்
போயிருப்பார்கள்.

உந்தன்
விரியக் கற்பனைகள்
இன்னும்
வேர்விடவில்லை
இந்த
மக்கிய பூமியிலே.

உந்தன்
புரட்சிக் கவிதைகள்
வறட்சி அறிவிற்கு
புலப்படவில்லை போலும்.

உன் கவிதைகள்,

குழந்தைக்குத் தாலாட்டு

இளைஞர்க்குக் காதல் பாட்டு

முதியோர்க்குச் சங்கீதம்

அந்நியனுக்கோ ஒப்பாரி

கவிதை
அமில ஊற்றுக்களை
நீ சுரக்கவில்லை என்றால்
அந்நியன் என்றோ
முகூர்த்தக்கால் ஊன்றி
முழுஉரிமை கொண்டாடி
தேசமணையில்
அமர்ந்திருப்பான்.

தமிழமுதம் தந்தோன்

பாவே தன்
உயிர்மூச்சாய்க்
கொண்டதனால்
நீ

பாவே(ந்)தன்
ஆனாயோ ?

உந்தன்
சிறு மீசையைப்போல்
கவிதை சொல்லி
அதில் இடியைப்போல்
கருத்தை வைத்தாய்.

தமிழுக்கும்
அமுதென்று பேரிட்டாய்

அதை உண்டுகளித்து
உன்னதமாய்
வரைந்திட்டாய்.

அந்தத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேரென்றே
போரிட்டாய்.

அதிலும் நீ
வாகைசூடி
வெற்றிகொண்டாய்

'பா'வை ரதியாக்கிய
பாரதிக்கு தாசனானாய்.

பாவை தமிழுக்கோ
நீ என்றென்றும்
நேசமானாய்.

குடும்பக் குதூகலத்திற்கு
நீ 'குடும்ப விளக்கு'
படைத்திட்டாய்.

'இசையமுதும்'
நீ பருகி
ஏனையோருக்கும்
பகர்ந்திட்டாய்.

'தமிழரின் மேன்மையை
இகழ்ந்தவனை
என் தாய்தடுத்தாலும்
விடேன்' என்றாய்

இங்கே சிலரின்
தவறுகள்
புகழப்பட்டுக்
கொண்டிருக்கின்றனவே.

'எதிரிகள் கோடி
இட்டழைத்தாலும்
தொடேன்'
என்று சூலுரைத்தாய்
இங்கே
உதிரியாய் போட்டாலே
உள்ளூரக் கலப்பவர்களை
என்ன சொல்ல!

'அயர்வில்லை அச்சமில்லை'
என்று
புரட்சி வழியில்
நடக்கவேண்டி
நீ போதித்தாய்

புரட்டு வழியில்
நடப்பவர்கள் அதனை
புறக்கத்தில்
வைத்திருக்கிறார்கள்.

'அதன் இனத்தை
அதுவே பகைக்கும்'

என்று நாய்க்கொரு
நற்பாடல் எழுதிவைத்தாய்.

அது காலப்போக்கில்
மனிதர்களுக்கு
மாறியதன் மர்மமென்ன ?

தமிழை நீ நேசித்தாயா ?

இல்லை. இல்லை.

உன்(அ)கோரப் பற்றுதலால்
தமிழே உன்னை நேசித்தது.

ஏழ்மையின் ஏக்கங்கள்

வறுமைக்கு நல்ல
வசந்தம்

அது எங்களிடம்
பூத்துக் குலுங்குகிறது.

நாய்வேசம்
போட்டுவிட்டோம்

குரைக்கக்கூட சக்தியில்லை.

எங்கள் வாழ்க்கையில்
எவ்வளவோ இடிகள்

மின்னல்கள்

பேய்மழை

புயற்காற்று

எங்கள் கால்கள்
பாதை உணராமல்
பயணப்பட்டுக்
கொண்டிருக்கின்றன.

எங்களின் சொத்து
பிருந்தாவனமோ
பூங்காவனமோ அல்ல
கோவணமே.
தெருவோர ஜீவனமே.

'பணம்' எனும்
ஆடையின்றி
பார்வைக்கு இங்கே
நிர்வாணமாய் நிற்கின்றோம்.

அமைதியும் நிம்மதியும்
அரிதிப்பெரும்பான்மை
இழந்தமையால்
துவம்சமாயிப் போனோம்.

பட்டினி என்பது
பட்டவர்த்தனமான போதும்
பார்வைகள் ஏதும்
விழவில்லை.

கண்ணாடியானோம்

எங்களை வைத்து
எத்தனையோ பேர்கள்
அலங்கரித்துக்
கொண்டார்கள்.

நாங்கள் மட்டும்
அலங்கோலமாய்
ரசம் போனோம்.

சமாதானம் செய்பவர்கள்
சமநிலைப் படுத்தாததேனோ?

நாங்கள்

உண்மை பேசுவதால்
உதைக்கப்படுகிறோம்

அவர்கள்
பொய்யைச் சொல்வதால்
பூஜிக்கப்படுகிறார்கள்.

எங்களால்
வரி — அவர்கள் ஆனார்கள்
நாங்களோ
வறியவர்கள் ஆனோம்.

இறைவா!
நீகூட இல்லையா?

அதனால்தான்
உன்னைத் தரணியில்
தலைக்குமேல் வைத்துத்
தூக்குகிறார்களா?

இல்லை நீ
அவர்கள் இல்லத்திலே
இலஞ்சம் வாங்கித்
தங்கிவிட்டாயா?

உலகமே உன் பெயரை
உச்சரிக்கும்படி நீ
உச்சஸ்தானியிலிருந்தாலும்
எங்களை மட்டும்
ஏன் இப்படி
நச்சரிக்கும்படி வைத்தாய்?

எச்சரிக்கை செய்கிறேன்.

புராணகாலத்தில் நீ
எத்தனையோ
அவதாரங்களில்
புறப்பட்டிருக்கிறாயே
எங்களுக்காக நீ
ஏழ்மையைப் போக்க
'பண' அவதாரம் எடுத்துப்
பறந்து வந்துவிடு.

'குடி'மகன்கள்

குடிப்பதால்
குறைவது
காசு மட்டுமல்ல.

வாழ்நாள்

உடல் பலம்

ஆடைகள்

சொந்தபந்தங்கள்

சொத்துக்கள்

அதிகமாவது
போதை மட்டுமல்ல.

கவலைகள்

உளறல்கள்

துணிச்சல்

வறுமை

இது தேவையா?

சமூகத்தில்
அரிதிப்
பெரும்பான்மையினர்
ஆதரிக்கின்றனரே.

சிம்மாசனத்தில்
இருக்க வேண்டிய
இந்தியக் குடிமகன்

சிரசாசனமாய்
நடுரோட்டில்
இந்தியக் குடி-மகனாய்
இருப்பதென்ன?

மனிதன்
மண்ணுக்குள் தானே
அடக்கம்.

இவர்கள்
பாட்டிலுக்குள்ளே
அடக்கமானதென்ன?

பாட்டிலின் கழுத்தை
நீ பிடிக்கிறபோது
அது உன்னுடைய
கழுத்தை
மறைமுகமாகப்
பிடிக்கிறதே.

உனக்குப்
புலப்படவில்லையா?

பால் பாட்டிலுக்கு
உன் குழந்தை
ஊசலாடும்போது
உன் பாட்டிலுக்கு
ஐம்பது நூறு
அவசியம்தானா?

உலைப்பானை கொதிக்கிறது.
அரிசி இல்லை.

உனக்கிந்த
ராட்சச வாழ்க்கை
தேவையா?
அதுதான்
உனது ராஜாங்கமா?

இதற்காக
மனைவியின் நகைகள்
மார்வாடியிடம் போனதால்
உன்னுடைய உயிரும்
எமனை நாடுகிறதே
தெரியவில்லையா?

தினமும் இங்கே குடித்தே
உனது அறிவை
எங்கே கொடுத்தே?

காந்தி பிறந்த நாடிது
கள்ளச் சாராயம் ஓடுது.

அண்ணா வாழ்ந்த நாடிது
அறிவு எங்கே போனது?

அறிவை இழந்த மானிடா
திருந்தி வாழப் பாரடா.

ஏழையின் வேதாந்தம்

'சுத்தம் சோறுபோடும்'
என்கிறார்கள்
எங்கள்
வீட்டுப் பானை
சுத்தமாக இருக்கிறது
அது எப்படி
சோறு போடும்?

இதுதான் நான்

அணிலே!

உனக்கு
அயோத்தி ராமன்
முதுகிலேதான்
நாமத்தைப்
போட்டான்.

ஆனால்,
எனக்கோ
அனேகம்பேர்
அதை
நெற்றியிலே
போட்டார்கள்.

ஆறும் பதினாறும்

காவிரி, கங்கை
எல்லாம் பெண்களாம்
அப்படியா
இங்கு பெண்கள்
ஓடுகிறார்கள்?

நாட்டு நடப்பு

காந்தியின்
சிலைமீது
சாய்ந்திருந்தான்
ஒருவன்

என்னே தேசப்பற்று?

அடையாளம் காண
அருகில் சென்றேன் நான்
ஒரே சாராய நெடி.

வண்ணங்கள்

காமத்திற்கும்
நிறமுண்டு.

'சிவப்பு' விளக்குகள்

'நீல'ப் படங்கள்

'பச்சை' வசனங்கள்

'மஞ்சள்' பத்திரிகை

அதிசயம்! ஆனால் உண்மை

பாறைகள்கூட
உருமாறும்போது
அவளின் வதனம்
அச்சாய் இருப்பதன்
மர்மமென்னவோ?

அழகு

அசிங்கமாயிருக்கிறது
'துகில்' என்றேன்

இப்பொழுது
எப்படி இருக்கிறதென்றாள்?

அழகாய் இருக்கிறது
மு'துகில்' என்றேன்.

சுகமும் — சோகமும்

அவள் —
அன்று என்
மனக்கோட்டையில்
'ராணி'யாகினாள்.

இன்று
என்னைப் பிரிந்து ஓடியதும்
'பிராணி'யாகினுள்.

கா'ரணங்கள்'

உனக்காகக்
கல்லெடுக்கிறேன் —
கோவில் கட்ட.

நீயும்
எனக்காகக்
கல்லெடுக்கிருய் —
கல்லறை கட்ட.

கணவன்

கண் + அவன் கணவன்

அதனுல்தானே
சில பெண்கள் கணவனை
க(ச)க்கிப் பிழிகிருர்கள்.

ஏழையின் கீதம்

நாணயமே!
நீ சதுரமாய்
இருந்திருந்தால்
எம்மிடமே இருந்திருப்பாய்

உருண்டையாகப்
போனதால்தான்
எமைவிட்டு ஓடுகிருய்.

'பட்ட'தாரிகள்

நாங்கள்
'பட்டம்' பெற்ற பின்னே
வாழ்க்கையில்
'பட்டோம்'.

புதிய கேள்வி

இன்று 'ஊமை வெயில்'
என்ருன் ஒருவன்

அந்தக் கவிஞன் கேட்டான்
'அப்போ நேற்று
பேசும் வெயிலா?' என்று.

குளிரும் – வெப்பமும்

நீ குளித்ததைப்
பார்த்ததும்
என் உடம்பு
தீக்குளித்தது.

கவர்ச்சியும்
கவிழ்ச்சியும்

அவள் —
அழகானதால்
தொட(ர)ப்போக
நான் அசிங்கமானேன்.

சுந்தர வதனம்

அவள் —
குளித்தால்
மேனியெங்கும்
சோப்பு மணக்காது.
மாருக,
அந்தச் சோப்பினிலே
அவள் மேனி
மணந்திருக்கும்.

தாத்பர்யம்

ஆடவன் வாழ்க்கைக்காக
ஏன் தினம் தினம்
ரணப்படுகிறன் தெரியுமா?

ஆடு + அவன் ஆடவன்
ஆகையால்தான்.

தேவை ரெண்டு வரங்கள்

இறைவா!
எனக்கு வேலையும்
கிடைக்க வேண்டாம்

வயிறும்
பசிக்க வேண்டாம்.

நிறங்கள்

வறுமையின் நிறம்
சிவப்பென்றல்
செல்வத்தின் நிறம்
கறுப்புத்தான்.

காரணம்,
பணம் அப்படி.

(வி)சித்திரப் பாவை

அவள் 'தேவதை'
என நினைத்து
அருகில் சென்றேன்

சீறினள்.

'நாக தேவதை'
என அறிந்து கொண்டேன்.

தூய்மைக் காதல்

அவளின்
கர்ப்பப் பையைத்தவிர
மற்ற இடமெல்லாம்
நான் வியாபித்திருக்கிறேன்.

வரமும் - கலவரமும்

அன்று
அவளே என்னைக்
கௌரவித்தாள்.

இன்று
அவளே என்னைக்
கவுர விட்டாள்.

சொற்சுவை

'மதுரம்' என்றல் தேனும்.

எப்படி?
மது-ரம்
இவையெல்லாம் தேனு?

உவமையின் உண்மை

அவளும் ஒரு
'வானவில்லே!'
என்னை
வளைத்துப் போட்டதால்.

இவரைத் தெரிந்துகொள்ளுங்கள்

அந்தத் தலைவர்
உண்மையைத்தான்
பேசுவார்.

பேசுவதைத்தான்
எழுதுவார்.

எழுதுவதுமட்டும்
பொய்யாக இருக்கும்.

பெயரிலே ....

'மருமகள்
பைத்தியக்காரி'
மாமியார் சொன்னுள்
உண்மைதான்.
'மரு'மகள் அல்லவா.

தேசம் எது ?

அமிழ்தின்
இனியதடி பாப்பா.
நம்
ஆன்ருேர்கள்
தேசம்'மது' பாப்பா.

மதியின் மயக்கம்

அவள்
அழகாய்
இருந்துவிட்டுப்
போகட்டும்.

அதற்காக
அவள் என்னை
முட்டாளாக்குவது
எந்த விதத்தில்
நியாயம் ?

தமிழ்மொழி

இன்பந்தருவது
முத்தமிழே !
முத்தமிலே.

ஒரே இடம்

சொர்க்கம்
வேறெங்கும் கிடையாது.

அது
இறந்தவன்
இதயத்துள் இருக்கிறது.

வடித்தேன்

மனைவி
கண்ணீர் வடித்தாள்.

நான்
கவிதை வடித்தேன்.

அதன் பிறகுதான்
அவள்
சோறு வடித்தாள்.

ஒரே கேள்வி

வரதட்சணைக்குப்பின்தான்
வாழ்க்கையாம்
எரிமலைக்குள்
தங்கச் சுரங்கம் என்ருல்
எவர்தான் போவார் ?
எண்ணிப் பார்ப்பதில்லை.

ஒரு கல்லூரி மாணவனின் டைரி

'அ' அச்சம்
'ஆ' ஆசை
'இ' இடி
'ஈ' ஈபோல்
'உ' உதை
'ஊ' ஊளை
'எ' எண்ணம்
'ஏ' ஏமாற்றம்
'ஐ' ஐயறிவு
'ஒ' ஒத்தடம்
'ஓ' ஓலம்
'ஔ' ஔவழி
'ஃ' அஃதே வாழ்வு.

சாபம்

பிரமன்
எங்களைப் படைக்கும்போதே
'வேலையின்றிக் கிடவது'
என்றே
சாபமிட்டானே
என்னவோ ?

அதுதான்
வேலையின்றித்
தவிக்கின்றோம்.

தேசம் - இங்கே சேதம்

காந்தியின் பொம்மை
இலவசம்
நடிகையின் பொம்மை
ஆயிரமாயிரம் ரூபாய்

இங்கேதான்
கூட்டா கூட்டம்
போட்டா போட்டி

வி(ஞே)தங்கள்

இதயம், மனம், உள்ளம்,
நெஞ்சம்

வார்த்தைகளில்
புள்ளி இருக்கிறது

ஆனால்,
அதன் ஆசைகளில்......

ஆசையின் எல்கை

நான்
சொத்துக்கு
ஆசைப்படவில்லை

ஆனால்,
சோத்துக்கு...?

புரிந்த போதினிலே....

பால்யப் பையனிடம்
காந்தியைத் தெரியுமா?
என்று கேட்டேன்.
நேரே பார்த்திடாத
அவன்கூட
'ஓ ! தெரியுமே'
என்றான்.
'சரி !
என்னைத் தெரிகிறதா? '

என்று கேட்டால்
எதிரே நிற்கின்ற
என்னையவே ஏற இறங்கப்
பார்த்துவிட்டு
'தெரியவில்லை'
என்கிறான்.

அப்போதுதான்
மஹாத்மாவுக்கும்
மனிதனுக்கும்
உள்ள வித்தியாசம்
புரிந்து கொண்டேன்.

மனக்கும் மரணம்

யாராவது ஒருவர்
என்னைக் கைவிட்டுவிட்டால்
யாராவது ஒருவர்
என் கையைப்
பிடித்துக் கொள்வர்.

இதோ —

மருத்துவர்
என் கையை விட்டுவிட்டார்

அதோ —

காலன்
என் கையைப்
பிடித்துக் கொண்டான்.

ஏழையின் நிலை

வாழ்க்கை —
எங்களுக்கு
'சக்கரமு'மல்ல.
'சதுரமு'மல்ல.

அது 'சகடை'தான்

அதனால்தான்
எங்கள் நிலைமை
எப்போதும்
இழுபறியாகவே
இருக்கிறது.

ரோஜாவும் - முள்ளும்

இன்பத்திலும் துன்பம்தான்
சாராயம் இன்பம்தான்.
பிரதிபலன் துன்பமல்லவா ?
விலைமகள் சுகம்தான்
அதில் 'எயிட்ஸ்'
துன்பமல்லவா ?
சீட்டாட்டம் விருப்பம்தான்
அதன் நட்டம்
துன்பமல்லவா.

இப்படியாக —
உடன் கிடைப்பது
சொர்க்க லாபம்.
மெல்ல மெல்லப் போவது
உயிர் மூச்செனும்
நட்டம்தான்.

ஆம் —
இன்பத்திலும் துன்பம்தான்.
ரோஜா அருகிலே
முள் இருப்பது போல்.

புத்தாண்டு - 1991

வருக புத்தாண்டே!
வருக! வருக!!
யாவருக்குமே நீ
பூத் தண்டாய்
மலர்ந்து
மணம் வீசிடுக!

தட்டுப்பாட்டினைத்
தகர்த்தெறிந்து நீ
தாராளத்தினைப்
புகுத்திடுக.

இனமதங்களை
இடித்தெறிந்து
சரிநிகரெனும்
இந்திர லோகத்தை
இப்புவி மீதே
எழுப்பிடுக.

ஆட்சிகள் இங்கே
அசையாமல் நீயே
அச்சாகச் செய்திடுக.

பக்தியும் மண்ணில்
படர்ந்து பறந்து நீ
பட்டொளிர்
வீசிடச் செய்திடுக.

ஒருவரே யாவருமாய்
யாவருமே ஒருவராய்
ஜெகத்தினிலே
சிறந்தோங்கி
சீர்பெற்றிட நீயே
செய்திடுக.

ஒரு ஜீவனும் இல்லை

எத்தனை குண்டுகள்
இலங்கைப் பிரச்சினையில்

கொன்றது எத்தனை
குவைத் தீவில்

பட்டது எத்தனை
பஞ்சாப் நகரில்

சுட்டது எத்தனை
காஷ்மீர் எல்லையில்

அத்தனை உயிர்களும்
அரும்பெரும் வைரங்கள்
அத்தனையுமே இங்கு
பொடிப்பொடி ஆனதே.

இந்தியா இங்கே
இருளினில் மூழ்கிட
முந்தியோ பிந்தியோ
நம்மின் உயிரும் —
மூலவன் காந்தி
மீண்டிட வேண்டும்
முதுபெரும் பாரதம்
முன்னிலை பெற்றிட.

அயல் நாடும்
முயல் நாடாய்
முன்னேறும்போது
தாய் நாடு
சேய்நாடாய்ச்
சாய்ந்திடலாமா?

கொடியினைக் கட்டிடும்
கறுகறுப்பு
கொண்ட வாழ்க்கையில்
காட்டினால்
நிச்சயமாய்

எல்லோரும்
இந்நாட்டு மன்னரே.

இனக் கலவரம்
பணக் கலவரம்
மனக் கலவரம்
குணக் கலவரம்
தினக் கலவரமானதால்
தொடர்ந்திங்கே
மரணத்தின்
எண்ணிக்கையை
மனிதனால் கூட
சொல்லமுடியாது.
கம்ப்யூட்டர்தான்
கணிக்க வேண்டும்.

தீவினில் விட்டாலும்
திருடுவதை விடாதவர்கள்
எத்தனை பேர்?

புத்திமதி சொன்னாலும்
புட்டிமது சொல்லும்படி
புக்குற்றோர்
புவியினில்தான்
எத்தனை பேர்?

இவர்களைத்
திருத்துவது யார்?

அதன்படி
திருந்துவது யார்?

ஒரு ஜீவனும் இல்லை.

இந்நிலையே
இறுதிவரை
தொடருமானால்

இங்கே
'ஒரு ஜீவனும் இல்லை'
என்றநிலை உருவாகும்.

யார்?

சீர்கெட்ட சமுதாயத்தின்
சிக்கெடுப்பது யார்?

பாழ்பட்ட சமூகத்தைப்
பளிங்காக்குவது யார்?

இங்கே —
சுறு மீன்களின்
வாய்க்குள்ளே
சிறு மீன்கள்
செத்துக்
கொண்டிருக்கின்றன.

யானை மிதித்திட
எறும்புகள் எழுந்திடுமா?

ஓர்புறம் பைங்கொடிகள்

மறுபுறம்
ஒத்துப்போக மறுக்கும்
ஆலமரங்கள்

இந்தச் சமுதாயத்திற்குச்
சாக்காடு இட்டவர்கள்தான்
யார்?

சம்பந்தப்பட்டவர்கள்
பல்லாக்கிலே

சபிக்கப்பட்டவர்கள்
பாதாளத்திலே.

சமநிலை வேண்டி
அவர்கள்
சரணாகதி ஆவார்களா?

இல்லை. இல்லை.

பல சந்ததி போயாச்சு
பல சரித்திரம் படிச்சாச்சு.

இந்தத் தரித்திரம்
இன்னும் தொலையவில்லை.

புலிக் கூண்டுக்குள்
கிளிக் கூட்டம்
பழியாவதைத் தவிர
பாதை வேறில்லையே!

அறியாதவரைக்
கண்டால்தான்
நாயே குரைக்கிறது.

அறிந்தவரைக்
கண்டாலே
குரைக்கிறானே.

பணத்தைப்
பெட்டிக்குள்ளே
பூட்டி வைத்தால்

பாசத்தை
வீட்டுக்குள்ளே தான்
பூட்டிவைக்க முடியும்.

மண்ணின் உறவு
மணக்கின்றபோது
மலருக்குத் தெரியாது.

மனிதனின் உறவும்
மரணம் வரும்வரை
மதியற்றோனுக்குத்
தெரியாது.

இங்கே —
சட்ட திட்டங்கள்
சரிக்கட்டுபவர்களுக்கு
சலாம் போடுகின்றன.

இந்த
முகத்திரைகளைக் கிழித்து
அவர்களுக்கு
முத்திரை குத்தும்
முதல் மனிதன் யார்?

அவனுக்காக
ஒரு பரிசு
காத்துக் கொண்டிருக்கிறது.

அதுதான்
இந்தியா.

எமது அடுத்த வெளியீடு!

வரதட்சணைக் கொடுமை

மரபுக் கவிதைகள்

விலை ரூபாய் 4 - 00

" வாழ்க்கை எனும் போரினிலே
வாகை இன்னும் சூடாமல்
காக்கை போலே கரைந்திங்கே
காலம் எல்லாம் வாழ்கின்றோம்
பார்க்க யாரும் வாராமல்
பதுமை போலே ஆனதனால்
கேட்க யாரும் இல்லாமல்
கேள்விக் குறியாய் நிற்கின்றோம்."

அன்புடன்,
ஆறு ழாறு. அண்ணாமலை

கிடைக்குமிடம் :
ஆறுழாறு அண்ணாமலை
86, பெருமாள் செட்டியார் தெரு,
முத்துப்பட்டணம்,
காரைக்குடி - 1

அச்சிட்டோர்: அரசு அச்சகம், காரைக்குடி. போன்: 2518.



அறிமுகம்

இந்த 27 வயதான இளங்கவிஞர் பெயர் ஆறுழாகு. அண்ணாமலை. பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் உள்ள ஒ. சிறுவயல் இவரது சொந்த ஊர். இந்த ஊர் காரைக்குடியிலிருந்து வடக்கு நோக்கி 6 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது இவர் அழகப்பா கல்லூரியில் B. A. படிப்பை 1981 — 84-ல் படித்து முடித்தார்.

தந்தை சி. சித. அழகப்பச் செட்டியார். தாய் வள்ளியம்மை ஆச்சி தந்தையும் ஒரு சிறந்த கவிஞர். இதற்காக அவருக்கு 'மலர்வாணன்' என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

தம்பி அண்ணாமலை எழுதிய இந்த 'பௌர்ணமிக் கனுக்கள்' என்ற புதுக் கவிதை நூலைப் படித்தேன்.

நல்ல கவிஞன் சமுதாயத்தைப் பார்க்கிறான். அங்கே தென்படுகின்ற சமுதாய அவலக் கூறுகள் கவிஞனின் உள்ளத்தைத் தாக்குகின்றன. அந்த வகையில் தம்பியின் கவிதை ஆற்றல் தொடர்ந்து செல்வதால் நல்ல கவிஞனாக வருவான் என்று அவை உணர்த்துகின்றன.

வாழ்க கவிஞன், வளர்க அவன் ஆற்றல்.

பொற்கிழிக் கவிஞர், டாக்டர் ச. சவகர்லால்